21st July 1964]

சைக்கிள் தொழிற்சாலை (கிருஷ்ணகிரி)

* 607 கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரியில் சைக்கிள் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கும் உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில், விவரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) The Government sanctioned a scheme for the establishment of a Cycle Assembly Unit in the departmental Industrial Estate, Krishnagiri, as a small-scale industrial unit, for implementation during the Third Five-Year Plan. The cost of the scheme is Rs. 1,30,000 (Rupees one lakh and thirty thousand) non-recurring towards the purchase of machinery and equipment and Rs. 2,43,000 (Rupees two lakhs and forty-three thousand) recurring per annum towards the purchase of raw materials, consumable stores, contingencies and employment of the required staff.

The building for the Unit is nearing completion.

திரு. எம். வி. கரிவேங்கடம்: ஸார், இந்தத் தொழிற்சாலையில் எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்? இதில் சைக்கிள்கள் எப்போது தயாரிக்கப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது கட்டடம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். சீக்கிரத்தில் கட்டடம் கட்டி முடிந்து விடும் என்று நினைக்கிறேன். கட்டட வேலை முடிந்ததும் வேலை துவக்கப்படும்.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த வரையில் கட்டடம் கட்டி முடிவுக்கு வந்து, இதற்கு வேண்டிய எல்லா மெஷினரிகளும் கூட வந்தாய் விட்டது என்று தெரிகிறது. ஆகவே இதில் விரைவில் வேலை துவங்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கட்டடம் முடிந்துவிட்டால் வேலை துவங்குவதற்கு காலதாமதம் இருக்காது.

Drainage Scheme (Tiruthuraipundi taluk)

* 608 Q.—SRI C. M. AMBIKAPATHI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether there is any proposal to expedite the Kilaithangiar Drainage Scheme and Valavanar Drainage Scheme in Tiruthuraipundi taluk in Thanjavur district; and

(b) the year in which the scheme is proposed to be completed?

THE HON. SRI V. RAMAIAH : (a) Proposals for tackling the drainage problem in Kilaithangiar and Valavanar drains are under the consideration of the Chief Engineer (Irrigation).

(b) The proposals have not yet been finalised.